
*Interact Club of*

# KOKUVIL HINDU COLLEGE
# JAFFNA



# அருவி

## 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTERACT

*helping others to help themselves*

# சுரபி

# *Surabi*

## *Bulletin of*
## THE INTERACT CLUB
## *of*
## Kokuvil Hindu college

2012-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## INTERACT SONG

Let every person given of their love vi-va-la-interact To carry our message of service above vi-va-la-interact

Chorous

via-la-viva-la Interact
viva-la-viva-la Interact
Truth is our right
Love os our might
viva-la-Interact

When something is wrong let us straighten out viva - la-interact

For nothing is worse than a fear or doubt viva - la-interact (chorous)

The grooming of tomorrow's leaders we claim via-la-interact

Let's carry on service with fame to our name viva-la-interact (chorous)

The person with a smile is the person we need - viva-la-interact

Who loses himself in the shaming of greed viva-la-intreract. (chorous)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் பார்வையிலே...



கொக்குவில் இந்துக்கல்லூரியில் 27 ஆவது ஆண்டாகப் பெருமையுடன் செயற்பட்டுவரும் இன்ரறக்ட் கழகத்தின் சேவையைப் பாராட்டி அதன் வெளியீடான சுரபிக்கு ஆசிச்செய்தி வழங்குவதிலே பெருமகிழ்வெய்துகின்றேன். கல்லூரியிலும் அதன் சூழலிலும் சமூக நற்செயற்பாடுகளை ஆற்றி வருகின்ற இக்கழகமானது கல்லூரியின் பலமாகத் திகழ்ந்து வருவதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மாணவர் போக்குவரத்துக்களை ஏனைய பாடசாலை களையும் இணைத்து பாதுகாப்பான ஒழுங்கமைப்பை மேற்கொள்ளலும், அல்லல்பட்டு துயருறுவோருக்கு ஆறுதலும், பரோபகாரமும் ஆற்றுதலும், கல்லூரி சார்ந்த நிகழ்வுகள் விழாக்கள் அனைத்திலும் உடலியல் சார்ந்த பொறுப்புக்களை ஏற்று உன்னதபணியில் ஈடுபடும் உறுப்பினர்களையும் பொறுப்பாசிரியர் திருமதி கலா. சுந்தரேசன் அவர்களையும் மனமுவந்து பாராட்டுகின்றேன். இன்று புதிதாகப் பதவிப்பொறுப்பை ஏற்கும் புதிய நிர்வாகத்தினருக்கும் எனது இதயம் நெகிழ்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

தங்கள் செயற்றிறன்களையும் கலைத்துவத்தையும் வெளிப்படுத்தும் கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தின் வரலாற்றுச் சான்றாக அமையும் வருடாந்த வெளியீடான சுரபியின் வருகைக்காக அகமகிழ்ந்து வாழ்த்துவதோடு தொடர்வருடங்களிலும் ''சுரபி'' பிரகாசித்து நிற்க வேண்டுகின்றேன்.

நன்றி

**திரு. வே. ஞானகாந்தன்,**
அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியரின் பார்வையிலே...



கொக்குவில் இந்துக் கல்லூரி இன்ரறக்ட் கழகமானது யாழ் குடா நாட்டில் தலை நிமிர்ந்து நிற்பதற்கு மாணவர்களின் அயராத உழைப்பும் ஆளுமையுமே காரணமாகும். கழகங்கள் அமைப்பது மாணவர்கள் கல்வியோடு மட்டும் வெளியேறாது சமூகத்தில் திறம்பட சேவையாற்றி புகழுடன் வாழ வேண்டும் என்பதற்கே ஆகும். இதனை நனவாக்கிக் கொண்டிருக்கும் கொக்குவில் இந்துவின் இன்ரறக்ட் கழகம் சோம்பி இராது என்றும் உடலால் மட்டுமன்றி பணத்தாலும் சேவை செய்கிறது. இவை என்றும் இளமையுடன் பூத்துக் குலுங்கி காய்த்து கனியாக விளங்க வேண்டும்.

இக்கழகத்தின் பொறுப்பாசிரியர் என்று கூறுவதில் நான் பெருமை அடைகிறேன். இக்கழகம் எம் பாடசாலையில் ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை பல அர்ப்பணிப்புள்ள சேவைகளை ஆற்றி வருகிறது.

எம் கழக அங்கத்தவர்கள் அன்று முதல் இன்று வரை சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டு இயங்கி வருகின்றனர். இவர்கள் தங்கள் முழு ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் எம் கழகத்திற்கு வழங்கிவருவதை நான் அவதானித்துள்ளேன்.

வருடா வருடம் வெளிவரும் இச்சுரபி என்னும் நூலானது இம்முறை மிகப் புதுப்பொலிவுடன், மிக சிரமங்களுக்கு மத்தியிலும் இக்கழக மாணவர்கள் வெளியிடுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இன்ரறக்ட் கழகம் என்றால் கொக்குவில் இந்துக் கல்லூரி என எல்லோர் மனதிலும் நிழலாட இறையருள் பாலிக்க வேண்டும் என நல்லாசி கூறி வாழ்த்துகின்றேன்.

**திருமதி. கலா. சுந்தரேசன்,**
பொறுப்பாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் உள்ளத்திலிருந்து...



எமது கொக்குவில் இந்து அன்னையின் 27 ஆண்டுகள் தன்னலமற்ற சேவைகளை மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் புரிந்து வருகின்ற எமது இன்ரறக்ட் கழகமானது பல சிறந்த பணிகளையும் ஆற்றியுள்ளது. எமது கழக மாணவர்கள் தம் மனத்திலே சேவையினை மூச்சாகக் கொண்டு எந்த நேரத்திலும் சேவை செய்ய தயாராகவுள்ள என் சக உறுப்பினர்களின் மனப்பாங்கைப் பார்த்து வியந்துள்ளேன். அதையொட்டி நான் மிகப் பெருமிதமும் அடைகிறேன்.

இக்கழகம் வருடா வருடம் வெளியிட்டு வருகின்ற "சுரபி" மலரானது இம்முறையும் மிகப் புதுப்பொலிவுடன் பல்வேறுபட்ட ஆக்கங்களைத் தாங்கி வெளிவருவதையொட்டி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது கழகம் தொடர்ந்தும் எமது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் சேவைகளை வழங்கும் என உறுதி கூறுகின்றேன். இச் சுரபி சிறப்புற இறைவனை வேண்டுகின்றேன்.

*"Empowering you today to Enhance our tomorrow"*

**Int. Pres. S. Lavesan,**
*2014 (Bio)131*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளரின் எண்ணத்திலிருந்து...



மாணவன் ஒருவன் கல்வியில் மட்டுமல்லாது ஒரு வினைத்திறனான சேவையாளனாக உருவாக்குவதில் பல வருடங்களாகக் கொக்குவில் இந்துக்கல்லூரியில் தலை நிமிர்ந்து நிற்பது நம் இன்ரறக்ட் கழகமாகும். மாணவரின் சேவை மனப்பாங்கை கல்லூரிக்குள் மட்டும் அல்லாது வெளி இடங்களிலும் விருத்தியடைய வைப்பதில் இன்ரறக்ட் கழகம் முதலிடம் வகிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் நம்கழகம் மாணவர்களின் முயற்சியால் சிறந்த பல செயற்திட்டங்களைப் பல வழிகளிலும் செய்து சிறக்கிறது. கழகத்திலுள்ள எல்லா மாணவர்களும் இந்தச் சேவை மனப்பாங்கை வளர்த்து சேவைகளைச் செய்ய முன்வந்து கழகத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும், இதன் மூலம் நம் கழகத்தை முதல் தர கழகமாக்குவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பதே எனது அவா, அதனால் வெளிவருவதே இந்தச் "சுரபி" வெளியீடாகும். இது பல மாணவர்களை ஊக்குவிக்கும் என எண்ணி எமது சுரபியை எதிர்பார்ப்புக்களுடன் வெளியிடுகிறோம்.

நமது சுரபி சிறப்புற்று வெளிவர இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

*Service above self*

**Int. Sec. P. Jesuran**
*2014 (MAT)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் உள்ளத்தில் இருந்து

சிவபூமியென திருமூலரால் வர்ணிக்கப்பட்ட எமது நாட்டின் சங்கொலி முழங்கச் சரித்திரம் படைத்த சங்கிலியன் அரசாட்சி புரிந்த யாழ்ப்பாண நகரிலே கொக்குவில் பதிதனில் நன்னெறி வளர்த்திடும் அன்னையாம் கொக்குவில் இந்துக்கல்லூரியின் இன்ரறக்ட் கழகம் இவ்வருடம் 27 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்கிறது. இவ்வருடம் இன்ரறக்ட் கழகத்தினால் "சுரபி" எனும் நூல் வெளியிடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

எமது கழகத்தின் இதழானது பல கவிதைகளையும் பல தத்துவங்களையும் பல விந்தைகளையும் உங்கள் முன் வைத்து எமது சக மாணவர்கள் தமது முயற்சியின் ஊடாக தம்மை முன்னிலைப்படுத்தியதையிட்டு மகிழ்கின்றோம்.

இந்நூலை வெளியிடுவதற்கு பல பிரச்சனைகள் ஏற்பட்ட போதிலும் அவைகளைக் களைந்து ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறுவதுடன் இம்மலரில் இருக்கும் குறைகளைப் பொறுத்து நிறைகளை உங்கள் மனதில் நிறுத்துவீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

**Int. S. Senthuran,**
**Int. N. Birasanth,**
**Int. N. Nilani,**
**Int. S. Kajamukan.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கொக்குவில் இந்துக்கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தால் வெளியிடப்படுகின்ற "சுரபி" சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்கு வதில் மகிழ்வடைகின்றேன். யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற இன்ரறக்ட் கழகங்களில் பழைமையான கழகங்களில் கொக்குவில் இந்துக்கல்லூரி இன்ரறக்ட் கழகமும் ஒன்று.

இச்சஞ்சிகையில் கழகத்தினால் செய்யப்படுகின்ற செயற் பாடுகள் பற்றிய அறிக்கையும் படங்களும், அங்கத்தவர்களின் பட்டியலையும் கொண்ட வரலாற்று ஆவணமாகும்.

யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தினால் பல தடவைகள் பல விருதுகளை வென்ற இக்கழகம் துடிப்புடன் செயற்பட்டு வரு கின்றது. இதற்குக் காரணம் அதிபர், பொறுப்பாசிரியர் ஆகியோரது சிறப்பான வழிகாட்டலாகும். அதிலும் குறிப்பாக மிக நீண்ட காலமாகப் பொறுப்பாசிரியராக செயற்பட்டுவரும் திருமதி கலா சுந்தரேசன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையுமாகும்.

மாணவர்களின் தலைமைத்துவ ஆளுமைப் பண்புகளை விருத்திசெய்கின்ற இக்கழகத்தின் அங்கத்தவர்கள் பாடசாலைக்கும், சமூகத்திற்கும் சிறப்பான சேவை ஆற்றவேண்டுமெனக் கேட்டு வாழ்த்தி அமைகின்றேன்.

**Rtn. T. வாமதேவன்,**
தலைவர்,
யாழ்ப்பாண றோட்டறிக் கழகம்.
2012/ 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ந்தோங்கட்டும் வலுப்பெறட்டும்



யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் இன்டறக்ட் கழகமானது மிக நீண்டதொரு பாரம்பரியத்தைக் கொண்டது. கல்லூரியின் பாரம்பரியமும் தனித்துவமும் சற்றேனும் குறைவுபடாமல் இக்கழகம் அமைதியுடன் தன் பணிகளை அழகுற முன்னெடுத்துவருகின்றது. அருமை மாணவச் செல்வங்களின் இளம் உள்ளங்களில் ஊற்றெடுக்கும் அன்பும் மனித நேயமும் சேவையாய் மலர வழி சமைக்கும் இக் கழகத்தின் பணிகள் நிச்சயம் பெருமைக்குரியவை. கடந்த காலங்களில் இக்கழகத்தினர் எமது வாழ்வக நிறுவனத்தோடும் மிக நெருக்கமான உறவுநிலை யினைப் பேணிவந்துள்ளனர் என்பதையும் இவ்விடத்தில் பெருமை யோடு குறிப்பிட விரும்புகிறேன்.

பெருமை மிக்க இவ் இன்டறக்ட் கழகத்தின் ஈடில்லாப் பணிகளை அதன் இருப்பை ஆவணப்படுத்தும் வகையில் "சுரபி" யின் மற்றுமோர் இதழ் விரிவது கண்டு மட்டில்லா மகிழ்வெய்து கின்றேன். இந்த மணம் மிக்க இதழ் இன்னும் பல மாணவச் செல்வங்களையும் இன்டறக்ட் கழகத்தின்பால் ஈர்த்து அவர்களை யும் நல்லதோர் தடத்தில் நடை பயிலவைக்கும் என்பதில் ஐய மில்லை. இந்த சுரபி" எம் மாணவச்செல்வங்களுக்கு நல்வழி காட்டும் இரவியாய்த் திகழட்டும். இன்டறக்ட் கழகத்தின் இனிய நற் பணிகள் மேன்மேலும் வளர்ந்தோங்கட்டும். வலுப்பெறட்டும். அனைவர்களுக்கும் எல்லாம் வல்ல இறைவன் அருளட்டும்.

**ஆ. ரவீந்திரன்.**
தலைவர்
வாழ்வகம், சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our School Interact Club Board 2012/2013

| | | |
|---|---|---|
| Parton | :- | Mr. V. Gnanakanthan |
| Staff Advicer | :- | Mrs. K. Suntharesan |
| President | :- | Int. Sivakumar Lavesan |
| Vice President | :- | Int. Vithuya Thevarajah |
| Seceretary | :- | Int. Premkumar Jesuran |
| Ast. Seceretary | :- | Int. Thisalini Sivakumar |
| Treasure | :- | Int. Thevarajah Sathyan |
| | | Int. Sutharsini Thevarajah |
| Director Club Service | :- | Int. Pirathapan Surijapirakash |
| | :- | Int. S. Karikaran |
| Community Service | :- | Int. Sivanantham Ajeeban |
| Finance Director | :- | Int. B. Nirujan |
| International Understanding | :- | Int. J. Mathankan |
| | :- | Int. Sinthuya Naveetharajah |
| Editors | :- | Int. Srikantharajah Senthuran |
| | :- | Int. Nagarajah Birasanth |
| | | Int. Nilani Nadarasa |
| | | Int. S. Kajamukan |
| Sergeant-at-Arms | :- | Int. Thayani Mahenthirarasa |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EXECUTIVE COMITTEE (2013 - 2014)



From left to Right :

Seated : int. Sivakumar Lavesan (President) Mrs. Kala Sundresan (Vice Principal) Mr. T. Mohanathas (Deputy Principal) Mr. V. Gnanakathan (Principal) , Mrs. R. Chandranathan (Vice Principal) , Mrs. Jamuna Mathivannan (Teacher in Charge) Int. Premkumar Jesuran (Seceretary)

Standing :

int. Thayani Mahenthirarasa (Ast. Seceretary), int .sutharsini Thevarajah (Treasure), int. Sarathvijayananthan Sathusan ,Yogobalankokulan, int. Therarajan Sathyan (Freasure), int. Balakumaran Nirujan (Finaced Directer), int. J. Mathanken (interdUnder, int. Nagarajah Birasanth (Editor), int. Sivanatham Ajeeban (Com. Service), int. S. Karikanan (Director Club Service), int. Pirathepan Surijapirakas (Director Club Service).

Absentee:

int. Vithuya Thevarajah (Vice President) , int. Sinthuya naveetharajah ( inter Under) , int. Srikantharaj Senthuran (Editor)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Club Members

Y. Athavan
M. Thuvarakan
S. Senthikumaran
T. Sajikanth
S. Ajeeban
S. Kajamugan
N. Kuruparn
S. Thuvarakan
S. Sathushan
M. Vanitha
S. Karthkajini
K. Shangeerani
I. Shanusa
S. Keerthana
L. Thurkka
T. Manchusha
S. Jaceetha
L.Thurkka
T. Manchusha
S. Jaceetha
P. Thuvaraka
V. Pavidarani
K. Kobika
S. Nikilan
V. Vithuran
K. Mithursan
S. Deneesan
A. Janushan
P. Lithusan
K. Sajanthan
G. Vithusan

A. Sivachandru
S. Jathusan
S. Thuvarakan
T. Kanishan
Y. Kokulan
J. Kirisoth
K. Rakuram
S. Rabeesana
H. Rajinthan
B. Kirisanth
J. Dinojan
G. Gihan
S. Nishanth
E. Thanushan
E. Thirukumaran
P. Dilaxan
S. Thusinthan
S. Mithula
S. Sabisha
V. Vithusa
V. Kanisha
Y. Kanusiya
J. Kojiga
V. Vithusha
S. Nikilan
I. Thanusan
P. Diluxan
V. Anojan
G. Vithusan
S. Thuvarakan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்ரறக்ட் கழகம்

இணைப்பாடவிதான செயற்பாட்டில் மன்றங்கள், கழகங்கள் இயங்கி வருகின்றன. இவை கற்றல் மட்டும் அன்றி மாணவனுக்கு ஆளுமைத்திறன் பேச்சாற்றல் சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்பதே நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அந்த வகையில் இன்ரறக்ட் கழகம் 1986ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இது றோட்டறிக் கழகத்தின் மாணவக் கழகமாகும் திரு. அ. பஞ்சலிங்கம் அதிபராக இருந்த போது பா. சஞ்சயன் தலைவராகவும், திரு. கிருஸ்ணகுமார் பொறுப்பாசிரியராகவும் கொண்டு ஆரம்பமானது. இக்கழகத்தின் பிரதான நோக்கம் பாடசாலைக்கும் பாடசாலைக்கு வெளியே சமூகத்திற்கும் சேவை செய்ய வேண்டும் என்பதேயாகும். 15 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களையே அங்கத்தவராகக் கொண்டு இயங்கி வந்தது. உடை சேகரித்துக் கொடுத்தல், உலர் உணவு சேகரித்தும் செய்தும் கொடுக்கப்பட்டதுடன் றோட்டறிக் கழகம் பொருட்காட்சி ஒன்றினைச் செய்வதற்கு உரும்பிராயில் சிரமதானம் செய்து கொடுத்தனர். மற்றும் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட பேராசிரியர் லுதர்ஜெயசிங்க நினைவு வினாவிடைப் போட்டியில் எமது கழக அங்கத்தவர்கள் கலந்து கொண்டதுடன் செல்வன் க. மகேஸ்வரன் அதிக புள்ளி பெற்று பரிசில் வழங்கி சிறந்த இன்ரறக்ட் ஆகத் தெரிவு செய்யப்பட்டார். மேலும்,

அங்கத்தவரிடையே பிறருக்கு உதவும் மன உணர்வினை உருவாக்கும் பொருட்டு இரத்ததானமும் வழங்கப்பட்டது.

இப்போது வருடாவருடம் இருமுறை யாழ். போதனா வைத்திய சாலை அதிகாரிகள் வந்து மாணவரிடையே இரத்ததானத்தைப் பெற்றுச் செல்கின்றனர் 2008ஆம் ஆண்டு 79



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். கழகம் தமக்கான நிதியைச் சேகரிக்க கடித உறைகள் செய்து கடைகளுக்கு விற்றுப் பணம் சேகரித்தனர்.



1992-1993ஆம் ஆண்டு திரு. தேவராஜா, திருமதி கலாசுந்தரேசன், திருமதி சே. கதிர்காமநாதன் ஆகியோரும் இன்ரறக்ட் கழக உறுப்பினரால் (get togther) என்னும் நிகழ்வினை



சகோதர பாடசாலை மாணவர் களை அழைத்து நிகழ்ச்சிகள் நடாத்தி விருந்துபசாரமும் நடாத்தினர். மற்றும் முதன் முதலில் பூப்பந்தாட்டம் (Badmintan) பாடசாலை ரீதியாக உருவாக்கப்பட்டது. உள்ளக விளையாட்டுக்களான சதுரங்கம், டாம், கரம், கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு, மாணவர் களுக்கிடையே போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டமை இதனைப் பூப்பந்து விளையாட்டுக் கழகத் தலைவர் த. பகீரதராஜ் மற்றும் ஏனைய உறுப்பினர்களான இ. விமலன், து. கோகிலன், ச. காண்டீபன், பொ. சுரேஸ்குமார் போன்றவர்களின் உதவியுடன் சிறப்பாக நடை பெற்றது. அதுமட்டுமன்றி ஏனைய செயற்பாடுகளான

1. ஜாம் வெற்றுப் போத்தல் சேகரித்து விற்பனை செய்தமை
2. அக்காலப்பகுதியில் ஏற்பட்ட போரின் தாக்கத்தினால் காயமடைந்தவர்களுக்கு இரத்ததானம் வழங்குதல், பராமரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாடசாலையில் முதல் முதலாக பனை மரத்தால் வேலிகள் அடிக்கப்பட்டுப் பூக்கன்றுகள் வளர்த்தமை

4. Envelope செய்து வர்த்தக நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டது. மற்றும் பாடசாலைக்கு வெளியாக C.C.T.M பாடசாலை தூய்மை செய்யப்பட்டது. செஞ்சோலைச் சிறார்களுக்கு உணவு சேகரிக்கப்பட்டது. ஒவ்வொரு தவணை ஆரம்பத்தின் போதும் பாடசாலை தூய்மை செய்வதும் முதியோர் இல்லம் சென்று சிரமதானமும் செய்யப்பட்டது. 1995 இல் நடைபெற்ற இன்ரறக்ட் கழக அங்கத்தவர்களுக்கான நாடகப் போட்டியில் பங்கு பற்றி சிறந்த நடிகர் என்ற சான்றிதழும் வழங்கப்பட்டது. அத்துடன் பாடசாலை தொடங்குவதற்கு முன்பாக பாடசாலை விடுகின்ற போதும் வீதி ஒழுங்கைப் பேணி பலரது நன்மதிப்பினையும் பெற்றுக் கொண்டு இன்று வரை செயலாற்றி வருகிறது. பாடசாலையில் நடைபெற்ற கண்காட்சியின் போதும் சிற்றுண்டிச்சாலை அமைத்தும் பணம் சேகரித்தனர்.

1997 ஆம் ஆண்டு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற சதுரங்கப்போட்டியில் இன்ரறக்ட்கழக உறுப்பினர்கள் பங்கேற்றனர் அதில் செல்வன். பிறேம்குமார், சுகந்தன் ஆகியோர் முதலிடம் பெற்று சதுரங்கப்பலகையைப் பரிசிலாகப் பெற்றுவந்தனர். அப்பலகை நூல் நிலையத்தில் ஏனைய மாணவர் கற்பதற்காகக் கொடுக்கப்பட்டது. 1998-1999 ஆண்டுக் காலங்களில் திருமதி. கலாசுந்தரேசன் பொறுப்பாசிரியராகத் தொடர்ந்தும் கடமையாற்ற செல்வன் த. கார்த்தீபன் தலைமையில் இக்கழகம் வீதி ஒழுங்குப் பாதுகாப்புச் சபையினரை அழைத்து சகல இன்ரறக்ட்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகப் பாடசாலை மாணவர்களையும் அழைத்து கருத்துரை வழங்கியதுடன் தேநீர் உபசாரமும் செய்யப்பட்டது.

இவை மட்டுமன்றி நல்லூர்த் திருவிழாவின்போது எமது கழக உறுப்பினரால் துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு மேற்கொண்டு நிதி சேகரித்து எம் கழகத்திற்கான பூப்பந்தாட்டத்திடல் (Badminton) 30,000/= செலவில் தாரிட்டு அமைத்துக் கொடுக்கப்பட்டது. மற்றும் தாய்க்கழகமான றோட்டறிக் கழகம் நடாத்திய விவாதப் போட்டியில் பங்குபற்றி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டதுடன் தாய்க்கழகம் யாழ்மாவட்ட இன்ரறக்ட் கழகப் பாடசாலை செயற்பாடுகளை ஆய்வு செய்து எமது பாடசாலைக்குச் சிறந்த செயலாளர் சிறந்த பொருளாளர் என்ற சிறப்பினையும் விருதினையும் பெற்றுக் கொண்டது.

கழக அங்கத்தவர்களின் பெருமுயற்சியும் அயராத உழைப்பினாலும் தொடர்ந்து துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பினை மேற்கொண்டு நிதி சேகரிக்க முடிந்தது. 1999இல் " சுரபி" என்ற சஞ்சிகை முதல் முதல் செல்வன் க. பிரதீபன், ச. சஞ்சுதன் ஆகியோரது முயற்சியினால் வெளிவந்தது. இதைத் தொடர்ந்து வருடாவருடம் சின்னம் சூட்டு விழாவின் போது "சுரபி" வெளியீடு நடைபெறுகின்றது. அத்துடன் பெண் அங்கத்தவர்கள் தமது செயற்திட்டமாக வண்ண மாலைகள் செய்து பாடசாலை நிகழ்விற்குக் கொடுத்து வாடகைப் பணம் பெற்றனர். இக்காலத்தில் சேர்ந்த நிதியை எமது கல்லூரியின் மேடைக்கு வேண்டிய திரைச் சீலை செய்து கொடுக்கப்பட்டது. மேசை விரிப்பும் இக்கால கட்டத்தில் செய்து கொடுக்கப்பட்டு யாழ். மாவட்ட இன்ரறக்ட் கழகத்தில் அதிக நிதிசேகரித்த கழகம் என்ற பாராட்டையும் பெற்றுக் கொண்டது.

ஆனாலும் 2000ஆம் ஆண்டு இன்ரறக்ட்கழகம் பெரும் சேவையாற்றி வந்ததோடு பாடசாலையை விட்டு இக்கழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர் வெளியேறி நல்லூர் றோட்றக்ட் (இளைஞர்) கழகத்தை ஆரம்பித்த பெருமைக்கும் உரியது இக்கழகத்தின் தலைவராக து. றமணன். செயலாளராக யோ. கவிதாஸ் ஏனைய அங்கத்தவர்கள் சமூக நலனைக் கருத்திற்கொண்டு குடிநீர்க் கிணறுகளுக்குக் குளோரின் போட்டமை டெங்கு ஒழிப்புப் பிரசாரத்திற்குத் துண்டுப்பிரசுரம் அடித்து வீடுகள் தோறும் கொடுத்து அறிவுறுத்தல் வழங்கியதுடன் கருத்தரங்கும் நடாத்தினர். நாட்டுச் சூழல் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்குப் பாடசாலை முன்பாகத் தண்ணீர்த்தாகசாந்தி செய்ததுடன் வீடுகள் தோறும் சென்று உடுப்பு, உலருணவும் சேகரித்து கொடிகாமத்திற்குக் கொண்டு சென்று கொடுத்ததுடன் பாடசாலையில் தங்கியிருந்த அகதிகளுக்கு ஒரு நேர உணவினைப் பொறுப்பேற்றுக் கொடுத்தனர்.

இவர்கள் நிதி திரட்டு முகமாக நல்லூர் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பினை மேற்கொண்டதுடன் பாடசாலையில் குளிர்பானம் விற்றும் கலை நிகழ்ச்சி நடாத்தியும் சேகரித்தனர். அப்பணத்தில் பாடசாலை முன்வாயில் சேறாக இருந்தமையால் அதனை அழகுறச் செய்வதன் பொருட்டு பூமரங்கள் நடுவதற்கான வளைவுகள் கட்டி பூச்செடிகள் வாங்கி வைக்கப்பட்டது. கிறேசர் மண் பறித்து மேடாக அவ்விடம் மாற்றி அழகுபடுத்தி சிறந்த இன்ரறக்ட்கழக விருதைப் பெற்றதுடன் கொழும்பு றோட்டறிக் கழகத் தலைவர் இராஜேந்திரனை வரவழைத்து அவரைக்கொண்டு சின்னம் சூட்டும் விழாவினையும் நடாத்திய பெருமைக்குரியது.

2002ஆம் ஆண்டு சென்தோமஸ் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு எமது கழக உறுப்பினர் மூவர் சென்று வந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். 2003ஆம் ஆண்டு செல்வன் க. சுரேந்திரன் கு. நிற்பன் தலைவர் செயலாளராக இருந்தவேளை; றோட்டறிக் கழகத் தலைவர் திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு அமைய "பொக்கனை" என்ற பின்தங்கிய கிராமத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியினைப் பொறுப் பேற்றுப் பரிசுகளும் வழங்கி உற்சாகப்படுத்தினர். சுகாதார உத்தியோகத்தருக்குக் கொக்குவில் கிராமத்தில் சின்னமுத்துத் தடுப்பூசி தொடர்பான தகவல் சேகரித்துத் திரட்டிக் கொடுத்தனர்.

மேலும், கொக்குவிலில் அமைந்திருக்கும் ஐந்து பாலர் பாடசாலை மாணவர்களுக்குப் பற்பசையும் பற்தூரிகையும் வாங்கிக் கொடுத்து அதன் முக்கியத்துவம் பற்றி அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது. இதற்கும் மேலாக 2005ஆம் ஆண்டு செல்வன் வே. சேந்தன் தலைவராகவும் பிரணவன் செயலாளராக இருந்தவேளை பாடசாலைக்கென எமது கழகத்தினால் இன்ரநெற் தகவல் தொடர்பாடல் தொடக்கி அதனைப் பிரதி அதிபர் திரு. சு.வே. மகேந்திரனிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் யாழ். விஞ்ஞான மன்றத்தினால் நடாத்தப்பட்ட கண்காட்சியின் போது சிற்றுண்டிச் சாலை அமைத்து நிதி பெற்று இவையாவும் பாராட்டப்பட்டு றோட்டறிக்கழகத்தினால் பெறுமதி மிக்க கூடார உபகரணம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. "மல்டிக் கொம்லெக்ஸ்" என்ற பெயரிலான மாதிரிக் கம்பனியும் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டு அதற்கு முதலாம் இட பரிசும் பெற்றுக் கொண்டது. 2005-2006 அவை இன்றுவரை இயங்கிவருகின்றது. செல்வன் தினேஸ்குமார் தலைவராகவும் செல்வன் ச. துவாரகன் செயலாளராகவும் இருந்த காலத்தில் வெள்ளைப் பிரம்பு தினம் வாழ்வக உரிமையாளர் ரவீந்திரனை அழைத்து அவரைக் கௌரவித்த பெருமை உடையது. பல அங்கத்தவர்களை 2006-2007 இல் ரவிசங்கரைத் தலைவராகக் கொண்ட இக்கழகம் 2008-2009ஆம் ஆண்டு காலத்தில் 10.000/= பெறுமதியான அலுமாரி ஒன்றினை விழிப்புலனற்றோர் வாழ்வகத்திற்கு வழங்கி வந்தது.

இவ்வாறு தன்னலமற்ற சேவையில் இன்ரறக்ட் கழகம் தொடர்ந்தும் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் செய்து வரும் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறக்க முடியாத உண்மையாகும். 2009-2010 செல்வன் லகிந்தன் தலைவராகவும் செல்வன். அரிகரன் செயலாளராகவும் கொண்டு கழகச் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்றது. இக்காலத்தில் கொழும்பு இன்ரறக்ட் கழக மாணவர்களான மெதுன் துசி திறம்பட வரவேற்றதும் அதற்கு ஆமுனகுமாரவும் கலந்து கொண்டார். 2010-2011 இல் கழகத்தை நடாத்த செல்வன் ம. தஜீவன் தலைவராகவும் செல்வன் சேரலாதன் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவர்களது தலைமையில் சகல சேவைகளும் இன்று வரை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் செல்வன் சேரலாதன் சிறந்த இன்றரக்ட் கழக உறுப்பினராக அவ்வருடம் தெரிவு செய்யப்பட்டார் இவர்களால் 2011,2012ற்கான தெரிவு மேற்கொள்ளப்பட்டு செல்வன் சண்முகதாஸ் தலைவராகவும் செல்வன் துருவாசகன் செயலாளராகவும் கொண்ட இக்கழகம் முன்னையவர்களின் செயற்பாட்டுடன் றோட் டியூட்டி (Roadduty) செய்து பொலீஸ்மா அதிபரால் சான்றிதழ் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. அத்துடன் கொழும்பு யாழ்ப்பாண இன்ரறக்ட் உறுப்பினராக துருவாசகன் தெரிவு செய்யப்பட்டதுடன் அவரது அனுசரணையுடன் பலதடவை கண்டி, கொழும்பு, அம்பாந்தோட்டை, மாத்தளை போன்ற இடங்களுக்குச் சென்று நட்பின் கைகோப்பினை மேற்கொண்டதுடன் சிறந்த இன்ரறக்ட் கழகமாகத் தொடர்ந்து இயங்கி வருகின்றது. இதுபோல அடுத்த 2012இல் செல்வன் கயூரன் தலைவராகவும் செல்வன் அ. பிரசாந்த செயலாளராகவும் கொண்ட இக்கழகம் தனது செயற்பாட்டினை தடையின்றி உதவிக்கரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சேவையை தமது நோக்கமாகக் கொண்டு பல செயற்திட்டங்களைச் செய்து சிறந்த இன்ரறக்ட்கழகமாக இயங்கியதுடன் செல்வன் கயூரன் செல்வி டயானா சிறந்த இன்ரறக்ட் ஆகத் தெரிவு செய்யப்பட்டன. இதனைத் தொடர்ந்து பொறுப்பாசிரியராக திருமதி. ஜமுனா மதிவண்ணனும், செல்வன் சி. லவேசன் தலைவராகவும், செல்வன் பி. யசூரனும் செயலாளராகவும் கொண்டு **2013-2014** ஆண்டு இன்ரறக்ட் கழகம் மிகச் சிறப்பாக செயலாற்றி வருகின்றது. "சுரபி" நூல் வெளியீட்டினையும் செய்து வருவது போற்றுதற்குரிய தொன்றாகும்.

**திருமதி. கலா. சுந்தரேசன்,**
பொறுப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012-2013 ஆம் ஆண்டுக்கான செயற்திட்ட அறிக்கை

ஒவ்வொரு வருடமும் எமது இன்ரறக்ட் கழகம் ஆனது பல சிறந்த செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. அவ் வகையில் 2012-2013 ஆண்டுகளில் பலசிறந்த செயற்திட்டங்கள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

1) எமது செயற்திட்டங்களில் முக்கியமான வீதி பாதுகாப்பு ஒழுங்கு எமது கழக அங்கத்தவர்களால் தினமும் காலை 7.40 தொடக்கம் காலை 8.15 வரையும் மாலை 2.00 தொடக்கம் 2.15 வரையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2) 2012 ஆடிமாதம் எமது பாடசாலையில் இரத்ததான முகாமை நடாத்தியமை.

3) 2012இல் நல்லூர் பிரதேசசபையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியை நடாத்த உதவியமை

4) 2012-02-22 இல் கொழும்பில் நடைபெற் 21st interact district Conference இல் எமது பாடசாலைக் கழகம் சார்பாகக் கலந்து கொண்டமை

5) கொக்குவில் இந்துக்கல்லூரி அடையாளங்கள் பொறிக்கப் பட்ட பயிற்சிக் கொப்பிகளை விற்று பணம் சேகரித்தமை.

6) 2013 வாழ்வகம் , ஊனமுற்றோர் உதவி நிறுவனத்தில் எமது கழக அங்கத்தவர்களால் மிகப்பெரிய சிரமதானப் பணியை மேற்கொண்டு நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டமை.

7) 2013-02-24 இல் நடைபெற்ற 22nd interact district Conference இல் எமது பாடசாலைக் கழகம் சார்பாகக் கலந்து கொண்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) 2013-04-05 இல் Seanie-meanie செயற்றிட்டம் சார்பாகப் பொதுமக்களை அழைத்து மிகப்பெரிய நீரிழிவு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தியமை. இதன் போது நீரிழிவு விழிப் புணர்வை ஏற்படுத்தும் முகமாக சுவரொட்டிகள் பொது மக்களுக்கு வழங்கி நல்வரவேற்பை இக்கழகம் பெற்றுக்கொண்டது.

9) இவ்விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக எமது கழக உறுப்பினர்களால் நடைபயணம் மேற்கொள்ளப்பட்டது.

10) கொக்குவில் இந்துக்கல்லூரி அடையாளங்கள் பொறிக்கப் பட்ட பயிற்சிக் கொப்பிகளை விற்று பணம் சேகரித்தமை.

11) 2013இல் நல்லூர் பிரதேசசபையினர் நடாத்தப்பட்ட பொதுஅறிவுப் போட்டி நடாத்திக் கொடுத்தமை.

12) 2013-06-20 இல் எமது பாடசாலைக்கு ரூபா 1000 செலவில் அழகான பூச்செடிகளை வாங்கிக் கொடுத்ததோடு, அவற்றை நட்டுப் பராமரித்தமை.

13) 2013-07-04 இல் மாபெரும் இரத்ததான முகாமை நடாத்தியமை.

இன்ரறக்ட் கழக நிர்வாகம்
(2012–2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்ரறக்ட் கழக நியம யாப்பு
# Standard Interact Club Constitution

## அத்தியாயம் I

பெயர்

.......................................... இன்ரறக்ட் கழகம் என்பது இந் நிறுவனத்தின் பெயராக அமையும்.

## அத்தியாயம் II

**நோக்கும் இலக்குகளும்:**

சேவைசர்வதேச பரிந்துணர்வு என்பவற்றிற்கான அர்ப்பணிக்கப் பட்ட உலக நட்புறவில், இணைந்து செயற்படுவதற்காக இளைஞர் களுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதனைப் பிரதான நோக்காகக் கொண்டுள்ளது இன்ரறக்ட் கழகம்.

**இதன் இலக்குகள் பின்வருமாறு:**

**எட்டு இலக்குகள்**

Eight Goals

1) ஆக்கபூர்வமான தலைமைத்துவம் கண்ணியம்,ஆகியவற்றை இனங்காணலும் வளர்த்தலும்

2) பரிவு, பிறர்க்கு உதவும் தன்மை என்பவற்றை ஊக்குவித்தலும் கடைப்பிடித்தலும்

3) வீடு, குடும்பம் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல்.

4) தனிமனிதனுடைய பெறுமதியை அங்கீகரிப்பதன் அடிப்படையில் பிறரின் உரிமைகளுக்குரிய கௌரவத்தை வளர்த்தெடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) சொந்த வாழ்க்கையில் வெற்றி, சமுதாய முன்னேற்றம் குழுவாக இயங்குகையில் ஈட்டும் சாதனை என்பவற்றின் அடிப்படை யாகத் தனி மனிதப் பொறுப்புணர்வை ஏற்றுக்கொள்ளுதலை வலியுறுத்தல்.

6) சமுதாயத்திற்குச் சேவை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் என்ற வகையில் எல்லா வகையான தொழில்களுடைய தரத்தையும் பெறுமதியையும் மகத்துவத்தையும் அங்கீகரித்தல்.

7) சமுதாய, தேசிய, சர்வதேச விவகாரங்கள் பற்றிப் பரந்த அறிவையும் புரிந்துணர்வை யும் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

8) சகல மக்களினதும் மீதான சர்வதேசப் புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தையும் முன்னெடுப்பதற்கேற்ற வகையில் தனிமனித குழுரீதியான நடவடிக்கைகளுக்கு வழி கோலுதல்.

## அத்தியாயம் III

**அனுசரணை:**

றோட்டறிக் கழகம் இக் கழகத்திற்கு அனுசரணையாக இருத்தல்

1) யாழ்ப்பாணம் றோட்றிக் கழகம் இக் கழகத்திற்கு அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகம் அதன் ஐந்திற்குக் குறையாக உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவின் மூலம் இந்த இன்ரறக் கொள்கை கள் கழகத்தின் எல்லா நடவடிக்கைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rotary Club Must Sponsor This Club

வேண்டும். நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை மேற்பார்வை செய்யவும் கட்டுப்படுத்தவும் இந்த இன்ரறக்ட் கழகத்தின் தொடர்ச்சியான இயங்கும் தன்மை அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகத்தின் தொடர்ச்சியான நேரடியான பங்களிப்பில் தங்கியிருத்தல் வேண்டும். பெண்கள் மட்டுமே அங்கம் வகிக்கும் கழகமாயின் அக் குழுவில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பெண்கள் பதவிவழி உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

2) இக்கழகம் றோட்டறிக் கழகத்தின் ஓர் அங்கமன்று என்பதுடன் அனுசரணையாக விளங்கும் றோட்டறிக்கழகம் தொடர்பில் இக்கழகத்திற்கோ அல்லது அதன் உறுப்பினர்களுக்கோ எவ்வித உரிமைகளோ சிறப்புரிமைகளோ (Rights and Privilages) கிடையாது.

## அத்தியாயம் IV

**அங்கத்துவம்:**

60% வரவு அவசியம்

60% Attendance Necessary

1) பாடசாலை மட்டத்திலான கழகத்தில் ஒருவர் அங்கத்தவராகச் சேர விரும்பின் அவர் நல்லொழுக்கத்தையும் தலைமைத்துவ வளத்தையும் (Leadership Potential) கொண்டவராக இருப்பதோடு இடைநிலைக்கல்வி பயிலும் மாணவனாக அல்லது 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட மாணவனாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) இக்கழகத்தின் அங்கத்தவர்கள் எல்லோரும் ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ அல்லது இருபாலும் சேர்ந்தவர்களாகவோ அமையலாம்.

3) இக்கழகத்தின் அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைபற்றி அனுசரணையாக விளங்கும். றோட்டறிக் கழகம் முடிவு முறைக்குப் பாடசாலை நிர்வாகத்தின் அங்கீகாரம் இருத்தல் வேண்டும்.

4) ஒழுங்காக அட்டவணைப்படுத்தப்பட்ட கூட்டங்களில் குறைந்தது 60 சதவீதமானவற்றிற்கு ஒவ்வொரு அங்கத்தவரும் சமூகம் அளிக்க வேண்டும்.

5) அங்கத்தவர் ஒருவர்:

(அ) பாடசாலை விட்டு விலகும் போது

(ஆ) கழகத்தைக் கலைக்கும் போது

(இ) தேவையான காரணங்களுக்காகப் பணிப்பாளர் சபையினால் மன்னிக்கப்பட்டால் அன்றிக் கூட்டங்களுக்கு சமூகம் கொடுப்பது தொடர்பான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய முடியாதபோது அவருடைய அங்கத்துவம் தானாகவே இல்லாமல் போகின்றது

6) இக்கழகத்தில் ஒருவரின் அங்கத்துவம் இக்கழகத்தினால் தீர்மானிக்கப்படும் காரணங்களுக்காக மொத்த அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையுடன் வாக்கெடுப்பு மூலம் நீக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் V

**கூட்டங்கள்:**

மாதத்தில் இரண்டு தடவை கூப்பிடல் வேண்டும்.

Meettwice a month

1) பாடசாலைக் கடப்பாடுகளுக்கு அமைவாக அங்கத்தவர்களின் வசதிக்கேற்ப உப விதிகளில் குறிப்பிட்டபடி குறித்த ஒரு நேரத்திலும் இடத்திலும் மாதத்தில் இரண்டு தடவைகளுக்குக் குறையாமல் இக்கழகம் கூட வேண்டும்.

2) உபவிதிகளில் குறிப்பிட்டபடி இயக்குநர்சபை கூட வேண்டும். அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகத்தில் இன்ரறக்ட் குழுவின் உறுப்பினர் ஒருவரின் பிரசன்னமின்றி இயக்குநர் சபையின் எந்தக் கூட்டமும் உத்தியோகபூர்வமானதாக அமையாது.

3) அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகத்தின் அனுமதியுடன் விடுமுறைநாட்கள், தவணை விடுமுறைகளில் கழகத்தினதும் இயக்குநர் சபையினதும் கூட்டங்கள் இரத்துச் செய்யப்படலாம்.

## அத்தியாயம் VI

**உத்தியோகத்தர்களும் இயக்குநர்களும்:**

இயக்குநர் சபை கழகத்தைக் கட்டுப் படுத்தும்

Board of Directors Controls Club.

1) ஒரு தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மேலதிகமான உப விதிகளில் கூறப்பட்டுள்ளவர்களும் கழக உத்தியோகத்தவர்களாவர்.

2) கழக ஆட்சிக் குழுவானது தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் றோட்டறிக் கழகத்தின் அங்கீகாரத்துடன் இன்ரறக்ட் கழகத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானிக்கப்படும் மேலதிக இயக்குநர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு சபையாக இருக்க வேண்டும். இயக்குநர் சபையினதும் கழகத்தினதும் எல்லாவிதமான தீர்மானங்கள், கொள்கை மற்றும் நடவடிக்கைகள் என்பன றோட்டறிக்கழகம், இன்ரறக்ட்யாப்பு பிரமாணங்கள், சர்தேச றோட்டரி யால் ஏற்படுத்தப்பட்ட கொள்கைத் திட்டம் என்பனவற்றின் வரையறைக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும். பாடசாலையில் இயங்கும் எல்லா மாணவ அமைப்புக்கள் மற்றும் இணைப்பாடவிதான நடவடிக்கைகள் ஆகியன சம்பந்தமாகப் பாடசாலை நிருவாகம் ஏற்படுத்தி யுள்ள அதே ஒழுங்கு விதிகள், கொள்கைகள் என்பவற்றிற்கு அமைவாக இக்கழகம் இருக்க வேண்டும்.

இயக்குநர் சபை சகல உத்தியோகத்தர்கள் மற்றும் உப குழுக்கள் மீது பொதுவாகக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உடையது. நல்ல நோக்கத்திற்காக ஏதாவது ஒரு பதவி வெற்றிடமாக உள்ளதென்று இயக்குநர் சபை பிரகடனம் செய்யலாம்.

3) உத்தியோகத்தர்கள், இயக்குநர்கள் தெரிவுகள் வழமையான தெரிவு முறைக்கு அமைவாக நடாத்தப்படும்.

4) உபவிதிகளில் குறைந்த ஒரு காலப்பகுதி குறிக்கப் பட்டாலன்றி எல்லா உத்தியோகத்தர்கள் மற்றும் இயக்குநர்களின் பதவிகளின் பதவிக்காலம் ஒரு வருடமாக இருக்கும். சர்வதேச றோட்டறியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துமூல அனுமதியின்றி ஒரு வருடத்திற்குக் குறைவான பதவிக்காலம் ஒன்றுக்கான எந்தவித ஏற்பாடும் உபவிதிகளில் செய்யப்படுதலாகது.

## அத்தியாயம் VII

**செயற்பாடுகளும் செயற்றிட்டங்களும்:**

ஒவ்வோரு வருடமும் இரண்டு திட்டங்கள்

Yearlg Two Project

1) அத்தியாயம் 3 பிரிவு 1 இன் வரம்பிற்குட்பட்டு, இக்கழகம் தனது சொந்தச் செயற்பாடுகளைத் திட்டமிடவும் ஒழுங்கமைக்கவும் நிதி வழங்கவும் நடைமுறைப்படுத்தவும் பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகையவற்றிற்குத் தேவையான நிதி, மனித வலு மற்றும் சுய ஆக்கத்திறன் (Creative immagination) என்பவற்றைத் தானே வழங்குதலும் வேண்டும். ஏனைய நிறுவனங்கள் கூட்டாக இணைந்து கையேற்றுக்கொண்ட கூட்டு செயற்றிட்டங்கள் அல்லது செயற்பாடுகள் விடயத்தில் அப்பொறுப்புகளை அந்தந்த நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

2) கழகம் தனது செயற்பாடுகளில் வருடாந்தம் குறைந்தது இரண்டு (2) பெரிய வேலைத் திட்டங்களைப் பொறுப்பேற்க வேண்டும். ஒன்று பாடசாலை அல்லது சமுதாயத்திற்குப் பயன்படும் படியாகவும் மற்றையது சர்வதேச புரிந்துணர்வை வளர்த்தெடுப்பதாகவும் இருப்பதோடு கழகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் அல்லது ஆகக்கூடுதலான உறுப்பினர்கள் பங்குபற்றுவதாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) சேவை என்ற இலட்சியத்தால் இணைக்கப்பட்ட இளைஞர்கள் மூலமாக உலக நட்புறவின் ஊடாக சர்வதேசப் புரிந்துணர்வு, நல்லெண்ணம், சமாதானம் ஆகியவற்றை முன்னெடுப்பதனை ஊக்குவித்தலும், பேணுதலும் இன்ரறக்ட் கழகத்தின் சர்வதேச சேவையின் நோக்கமாகும். ஒவ்வொரு இன்ரறக்ட் கழக உறுப்பினரும் தனது சொந்த, சமுதாய, பாடசாலை வாழ்வில் சேவை என்ற இலட்சித்தைக் கடைப்பிடித்தலை ஊக்குவித்தலும் பேணுதலுமே சமுதாய மற்றும் பாடசாலை சேவையின் நோக்கமாகும்.

4) தனது நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தத் தேவையான நிதியைத் திரட்டுவது கழகத்தின் பொறுப்பாகும். அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகத்திடமிருந்து சிறப்பான சந்தர்ப்பத்திற்கு மேலாக எந்தவித நிதியுதவியையும் கோரவோ, பெற்றுக்கொள்ளவோ கூடாது. தனக்கு அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகத் திடம் அல்லது ஏனைய இன்ரறக்ட் கழகங்களிடம் பொதுவான நிதியுதவிக் கோரிக்கைகள் விடுத்தல் ஆகாது. இத்துடன் தனிநபர்கள் சமூகத்தில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அமைப்பு களிடம் பெறுமதியான ஏதாவது ஒன்றைக் கைமா றாகச் செலுத்தாமல் நிதி உதவி வேண்டிக் கோரிக் கைகள் விடுத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் VIII

**குழுக்கள்:**

தேவையான குழுக்கள்

Committees Needed

1) இந்தக் கழகத்தின் உபவிதிகளில் பின்வரும் நிலையியற் குழுக்களுக்கான பிரமாணங்கள் இருத்தல் வேண்டும். சர்வதேச புரிந்துணர்வு சேவை, நிதி, கழகம் மற்றும் இக்கழகத்தின் நிர்வாகத்தின் வசதிக்கென தேவையானதாகத் தோன்றும் ஏனைய வேறு நிலையியற் குழுக்கள்.

2) இயக்குநர் சபையின் அனுமதியுடன் தலைவர், தான் அவசியமானதெனக் கருதும் விசேட குழுக்களை அவற்றின் கடமைகளைக் குறித்துரைத்து நியமிக்கலாம். அப்படியான எல்லா விசேட குழுக்களும் அவற்றின் கடமைகள் நிறைவடையும் போது நியமித்த தலைவரினால் கலைக்கப்படும் போது அல்லது அவரின் பதவிக்காலம் முடிவடை யும்போது இவற்றில் எது முதல் இடம்பெறுகிறதோ அப்போது செயலிழக்க வேண்டும்.

## அத்தியாயம் IX

**கட்டணங்கள்:**

கட்டணங்கள் குறைந்த அளவாக இருக்க வேண்டும்

Dues Must Be Minimal

கழகத்தின் அங்கத்துவம் மீதான ஏதாவது மேலதிக கட்டணங்கள் குறைந்தளவாக இருக்கவேண்டும் என்பதோடு, அது கழகத்தின் நிர்வாகச் செலவினங்களை ஈடுசெய்யும் நோக்கத்திற்காகவும் மட்டுமே அமைதல் வேண்டும். கழகத்தால் பொறுப்பேற்கப்படும் செயற்பாடுகள், செயற்திட்டங்கள் என்பவற்றிற்கான நிதி பொதுவாக இக்கட்டணங்களுக்கு அப்பாற்பட்டு சேகரிக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் X

**யாப்பையும் உப விதிகளையும் ஏற்றுக்கொள்ளல்:**

ஒவ்வொரு உறுப்பனிரும் இணங்கி யொழுகுதல் வேண்டும்.
Every Member Must Comply

இக்கழகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் அங்கத்து வத்தை ஏற்றுக்கொண்டு அத்துடன் அங்கத்தவராகத் தொடர்ந்து இருப்பதன் மூலம் இன்ரறக்ட் கழகத்தின் நோக்கும் இலக்குகளும் என்பதால் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு இன்ரறக்ட் கழகத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறார் என்பதோடு இக்கழகத்தின் யாப்பையும் உபவிதி களையும் ஏற்றுக்கொண்டு அதற்கு இணங்கி ஒழுக சம்மதிக்கிறார் என்ற இந்த நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இக் கழகத்தின் சிறப்புரிமைகளுக்கு ஒருவர் உரித்து உடையவராகிறார்.

தமக்கு யாப்பின் ஒரு பிரதி கிடைக்கவில்லை என்று கூறிக்கொண்டு யாப்பையும் உப விதிக ளையும் கடைப்பிடித் தொழுகுவதிலிருந்து எந்த உறுப்பினரும் நீங்கக் கூடாது.

## அத்தியாயம் XI

**உபவிதிகள்:**

உப விதிகள் தேவை
By Laws Needed

இக்கழகம் இன்ரறக்ட் கழக நியம உபவிதிகளை இந்த யாப்பிற்கு அமைவானதும் கழகத்தின் நிர்வாகத்திற்கு அத்தியாவசியமானதுமான அத்தகைய திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அத்தகைய திருத்தங்கள் இன்ரறக்ட் கழக நியம உபவிதிகளில் விபரிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பான நடைமுறைக்கு ஏற்ப அமைந்திருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XII

**இலச்சினை:**

இலச்சினையைப் பயன் படுத்தல்
Emblem for Exclusive Use

இன்ரறக்ட் உறுப்பினர்களின் பாவனைக்கும் பயனுக்குமாக (Exclusiveuse & benefit of Ineract members) இன்ரறக்ட் சின்னம் பேணப்படுதல் வேண்டும். தமது அங்கத்துவ கலத்தில் இக்கழகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் இன்ரறக்ட் இலச்சினையை மகத்துவமான பொருத்தமான முறையில் அணிவதற்கு அல்லது வேறுவகையில் பயன்படுத்துவதற்கு உரித்துடையவர். தனது அங்கத்துவம் இழக்கும் போது அல்லது கழகம் செயற்படாமல் நிறுத்தி வைக்கப்படும்போது அப்படிப்பட்ட உரித்துக்களை அவர் கைவிட வேண்டும்.

## அத்தியாயம் XIII

**காலப்பகுதி:**

எப்படி ஒரு கழகம் செயற் படாமல் நிறுத்தி வைக்கப்படும்
Howa Club Could be Terminated

இந்த இன்ரறக்ட் கழகம் சர்வதேச றோட்டறியினால் ஏற்படுத்தப்பட்ட இன்ரறக்ட் தொடர்பான யாப்பு கொள்கைத் திட்டம் என்பவற்றின் பிராமணங் களுக்கு அமைவாகத் தொடர்ந்து செயற்படும் வரை நிலைத்திருக்கும் அல்லது

அ) தனது தீர்மானத்தின் மீது நடவடிக்கை மீதும் இக்கழகத்தினால் அல்லது தனது ஆதரவை விலக்கிக்கொள்வதன் மூலம் அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகத்தினால் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) இந்த யாப்பிற்கு ஏற்றவகையில் செயற்படாமைக்காக அல்லது வேறு ஏதாவது காரணத்திற்காக சர்வதேச றோட்டறியினால் இக்கழகம் நிறுத்தி வைக்கப்படும் வரை நிலைத்திருக்கும். இக்கழகம் இடைநிறுத்தி வைக்கப்படும் போது இன்ரறக்ட் பெயர், இலட்சினை என்பன தொடர்பாக அமைத்து உரிமைகள், சிறப்புரிமைகள் என்பவற்றை இக்கழகமும் அதன் உறுப்பினர்களும் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் கைவிடவேண்டும்.

## அத்தியாயம் XIV

**திருத்தங்கள்:**

எப்படித் திருத்தப் படுகிறது

How Amended

சர்வதேச றோட்டறியின் இயக்குநர்சபையின் நடவடிக்கை ஒன்றால் மட்டுமே இந்த யாப்பு திருத்தப் படலாம். அத்துடன் சர்வதேச றோட்டறியின் இயக்குநர்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இன்ரறக்ட் கழக நியம யாப்பிற்கான எல்லாத் திருத்தங்களும் தாமாகவே இந்த யாப்பைத் திருத்தும் தன்மை வாய்ந்தன.

# இன்ரறக்ட் கழக நியம உபவிதிகள்

# Standard Interact Club by Laws

## அத்தியாயம் I

**தேர்தல்:**

உத்தியோகத்தர் தெரிவு

Election of Officers

1) தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர், இயக்குநர்கள் ஆகிய பதவிகளுக்கான தேர்தல்கள் வருடாந்தம் பங்குனி 15ஆம் திகதிக்கு முன்பதாக நடத்தப்படல் வேண்டும். தேர்ந்தெடுக்ககப் பட்டவர்கள் ஆடி 1ஆம் திகதி அன்று பதவியேற்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) உத்தியோகத்தர் தேர்வுக்கான பிரேரணைகள் (Nomination) எழுத்துமூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ செய்யப்படல் வேண்டும். ஒரு பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் தெரிவு வாக்கெடுப்பு மூலம் நடைபெறும். பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு கூட்டத்திற்கு அடுத்த முறைப்படியான கூட்டத்தில் வாக்களிப்பு நடைபெற வேண்டும். சமூகமளித்த உறுப்பினர் களில் பெரும்பாண்மை வாக்குப் பெற்ற வேட் பாளர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

3) தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கு மேலதிகமாக 4 இயக்குநர்கள் தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

## அத்தியாயம் II

**உத்தியோகத்தர் கடமைகள்:**

உத்தி யோகத்தர் கடமைகள்
Duties of the Officerr

1) தலைவர்:- கழகத்தில் எல்லாக் கட்டடங்களிலும் விசேட கட்டடங்களிலும் இயக்குநர்சபைக் கூட்டங் களிலும் தலைவர் தலைமைவகிப்பார். இயக்குனர் சபையின் அங்கீகாரத்துடன் அவர் சகல நிலையிற் குழுக்களையும் விசேட குழுக்களையும் நியமிப்ப தோடு இயக்குநர் சபையில் ஏதேனும் ஓர் வெற் றிடம் ஏற்படும்போது சபையின் அங்கீகாரத்துடன் அவ்வெற்றிடத்திற்கு ஒருவரை அடுத்த வழமையான கழக உத்தியோகத்தர் தெரிவு நடைபெறும் வரை நியமிக்கலாம். எல்லாக் குழுக்களிலும் அவர் பதவி வழி அங்கத்தவராக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) உபதலைவர்:- ஏதாவது காரணத்திற்காக தலைவரைப் பதவியில் இருந்து நீக்கும் போது உப தலைவர் அந்த இடத்தினை நிரப்பவேண்டும். தலைவர் இல்லாதவிடத்து கழகத்தினதும் சபையினதும் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை வகிக்க வேண்டும்.

3) செயலாளர்:- செயலாளர் கழகத்தின் சகல பதிவேடுகளையும் பேண வேண்டும். கழகத்தினதும் இயக்குநர்சபையினதும் எல்லாக் கூட்டங்களினதும் அறிக்கைகளைப் பேண வேண்டும். (Minutes)

4) பொருளாளர்:-பொருளாளர் சகல நிதிகளையும் பாதுகாப்பவராகவும் அதுபற்றிய தேவையான பதிவுகளைப் பேணுபவராகவும் இருக்க வேண்டும். இயக்குநர்சபை அங்கீகரித்த வங்கியில் அத்தகைய நிதியை அவர் வைப்பிலிட வேண்டும். இயக்குநர் சபையில் தீர்மானிக்கப்பட்ட நடைமுறைக்கேற்ப அவர் கொடுப்பனவுகளைச் செய்ய வேண்டும். கழகத்தின் ஒவ்வோர் கூட்டத்திலும் நிதிநிலை அறிக்கையை அவர் சமர்ப்பிப்பதோடு கழகத்தின் எந்த அங்கத்தவரும் அவற்றைப் பார்வையிட விரும்பும் போது சகல பதிவுகளையும் கிடைக்கச் செய்யவேண்டும்.

5) இயக்குநர்சபை:- யாப்பில் கூறப்பட்டுள்ளவாறு இயக்குநர் சபையே கழக ஆட்சிக் குழுவாகும். கழகச் செயற்பாடுகள் பற்றி எல்லா அங்கத்தவர்களுக்கும் விளக்குமுகமாக கழக வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். மாதத்தில் ஒரு தடவைக்குக் குறையாமல் இச் சபையின் கூட்டங்கள் நடாத்தப் படல் வேண்டும். இதில் எந்த ஓர் அங்கத்தவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமளிக்க அனுமதிக்கவேண்டும். எனினும் இதில் சமூகமளிக்கும் அங்கத்தவர்கள் சபையில் முன் அனுமதியின்றி அக்கூட்டத்தில் பேச வேண்டும்

## அத்தியாயம் III

**கூட்டங்கள்:**

மாதத்தில் இரு தடவை கூட வேண்டும் Meet twice a month

1) அங்கத்தவரின் வசதிக்கேற்ப நேரத்திலும் இடத்திலும் கழகக் கூட்டங்கள் குறைந்தது மாதத்தில் இரு தடவையும் சபைக்கூட்டங்கள் குறைந்தது மாதத்தில் ஒரு தடவையும் நடத்தப்படல் வேண்டும்.

2) அங்கத்தவர் தொகையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் சமூகமளிக்குமிடத்து சாதாரண அல்லது விசேட கழகக் கூட்டங்கள் கூட்டம் நடாத்துவதற்குத் தேவையான குறைந்த எண்ணிக்கையைக் கொண்டுள்ளதாக அக் (Quorum) கூட்டம் கருதப்படல் வேண்டும்.

3) பாடசாலை அதிபர், றோட்டரி ஆலோசகர் ஆகியோரின் தகவலுக்காகவும் தேவைப்படும் வழிகாட்டல்களுக்காகவும் விசேட கூடட நிகழ்ச்சி நிரல் முன்கூட்டியே அவர்களுக்கும் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

சபைக்கூட்டத்திற்கு குறைந்தது 4 இயக்குநர்சபை உறுப்பினர்கள் சமூகமளித்து அதில் ஒருவர் தலைவராகவோ அல்லது உப தலைவராகவோ இருந்தால் கூட்டம் நடாத்தத் தேவையான குறைந்த எண்ணிக்கையைக் கொண்டுள்ளதாக அக்கூட்டம் கருதப்பட வேண்டும். அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகத்தின் இன்ரறக்ட் குழு உறுப்பினர் ஒருவரின் பிரசன்னமின்றி கழகத்தினரோ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குநர்சபையினரோ கூட்டும் எந்த ஒரு கூட்டமும் உத்தியோகபூர்வமானதாகக் கருதப்பட மாட்டாது.

## அத்தியாயம் IV

**கட்டணங்கள்:**

புதிய அங்கத்தவர்களிற்கான அனுமதிக் கட்டணம் ரூபா ........................................ ஆக இருக்க வேண்டும். வருடாந்த சந்தா ஒரு அங்கத்தவருக்கு ........................................................... ஆக இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் V

**குழுக்கள்:**

1) குழுக்களின் கடமைகள்

இயக்குநர்சபையின் அனுமதியுடன் தலைவர் பின்வரும் நிலையியற் குழுக்களை நியமிக்க வேண்டும்.

அ) Dutiesof Committees

சர்வதேசப் புரிந்துணர்வு:- சர்வதேசப் புரிந்துணர் வினைக் கழக அங்கத்தவரிடையேயும் பாடசாலை களிலும் சமூகரீதியிலும் பிற இடங்களிலும் உருவாக்குவதற்கு வேண்டிய வழிகளை வகுக்கும் பொறுப்பு இக்குழுவிடம் சுமத்தப்பட வேண்டும். இத்துறையில் வருடாந்தம் ஒரு பெரிய செயற்றிட்டத்தை உருவாக்கி திட்டமாக்குவது இக்குழுவின் கடமையாதல் வேண்டும். அத்தகைய திட்டத்தில் கழக உறுப்பினர்கள் அனைவரும் அல்லது பெரும்பான்மையினர் பங்கு பற்றுவதாக அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) சேவை: - சர்வதேச புரிந்துணர்வைத் தவிர்ந்த வேறு ஒரு பெரிய சேவை திட்டத்தை வருடாந்தம் வகுத்தல் இக்குழுவின் பொறுப்பாக அமைதல் வேண்டும்.

இ) நிதி: - பொருத்தமான குழுவின் ஒத்துழைப்புடன் கழகத்தின் எல்லா அல்லது ஏதாவது ஒரு நடவடிக்கைக்கு நிதி வழங்கத் தேவையான வழிவகைகளை இக்குழு வகுக்க வேண்டும்.

ஈ) கழகம்: - வரவு, அங்கத்துவம், நிகழ்ச்சிகள், நட்புறவு, பொதுசனத் தொடர்பு மற்றும் பொருத்தமானதெனத் தோன்றும் ஏனைய விடயங்களுக்கு இக்குழுவும் தமது திட்டத்தினை நடைமுறைப் படுத்தும் எந்த முயற்சியும் எடுக்கக்கூடாது. பொறுப் பாக இருத்தல் வேண்டும். கழக அங்கத்தவர்களின் பெரும்பான்மை அனுமதி கிடைக்கும் வரை எந்தக் குழுவும் தமது திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் எந்த முயற்சியும் எடுக்கக்கூடாது.

## அத்தியாயம் VI

**திருத்தங்கள்:**

எப்படி உப விதிகளைத் திருத்துவது

How to Amend by Lowa

கூட்டம் நடாத்தத் தேவைான குறைந்த எண்ணிக் கையானோர் சமூகமளித்துள்ள சாதாரண அல்லது விசேட அங்கத்தவரின் கூட்டமொன்றில் பெரும் பான்மை வாக்குகளில் இந்த உபவிதிகள் திருத்தப் படலாம். எனினும் அத்தகைய வாக்கெடுப்பு சம்பந்தமான அறிவித்தல் குறைந்தது 4 நாட்களிற்கு முன் கழகக் கூட்டமொன்றில் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் அத்தகைய திருத்தம் அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகத்தினால் அனுமதிக்கப்பட வேண்டும். இந்த உபவிதிகளில் எதுவும் இக்கழகத்தின் பிறப்பிற்கு முரணானதாக இருக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

**Mr. A. Thuruvasan**
(Former Seceretary Interact Club)

**Mr. Piramoth**
(Foreign)


**Mr. Thineshkumar**
(Former President Interact Club)

**Mr. Seralathan**
(Former Seceretary)

**Miss. Meerajini**
(Teacher K.H.C.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரிழிவு வெளிநிலை விழிப்புணர்வில் எமது இன்ரறக்ட் கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகத்தின் விருதுகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரம் நடுதல் நிகழ்வில்
## எமது இன்ரறக்ட் கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயின் இடர் மற்றும் அதன் தடுப்புப் பற்றிய முக்கிய தகவல்

நீரிழிவு நோய் என்றால் இன்சுலின் குறைவினால் அல்லது இன்சுலின் செயற்பாட்டுக்கான எதிர்ப்பு அதிகரிப்பதால், இன்சுலினின் செயற்பாடு பலவீனமடைந்து குருதியில் வெல்ல நிலை அதிகரிக்கும் நிலையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீரிழிவின் வகைகள்**

1.) நீரிழிவு வகை 01 (TIDM)

1-10% மக்களைப் பாதிக்கிறது.

2) நீரிழிவு வகை 01 (T2DM)

நீரிழிவுடையவரில் 95% மக்கள் இவ்வகையினால் பாதிக்கப்படுகிறார்கள். 50% மக்கள் தங்களுக்கு நோயிருப்பதை அறியாதுள்ளனர்.

3) கர்ப்பகாலத்தில் ஏற்படும் நீரிழிவு (GDM)

T2DM ஏற்படுவதற்கான காரணங்கள்

அவையாவன: -

1. பிறப்புரிமையியல்
2. கருவில் குழந்தையின் தோற்றம்
3. வாழ்க்கை முறை
4. மன அழுத்தம்



இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள்

* இருதய நோய் மற்றும் பக்கவாதம்
* சிறுநீரகச் செயலிழப்பு
* குருட்டுத் தன்மை
* அவயத் துண்டிடிப்பு

**நீரிழிவைத் தடுக்கும் அடிப்படை வழிகள்**

**இடர் காரணிகளை இனங்காணுதல்**

* உடல்சார்ந்த காரணிகள்
* உடல் நிறை அதிகரித்தல்
* உடற்பயிற்சி குறைவு
* இடுப்பளவு அதிகரித்தல்
* குடும்ப வரலாறு
* கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படுதல்
* அதி கூடிய பிறப்பு நிறை
* மன அழுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரசாயனக் காரணிகள்**

* குருதியின் வெல்ல நிலை
* குருதியின் கொழுப்பு அதிகரித்தல்

**வாழ்க்கை முறையில் மாற்றங்கள்**

* சரியான போசாக்கு
* போதியளவு உடற்பயிற்சி
* மன அழுத்தத்தைத் தணித்தல்

**உட்கொள்ள வேண்டிய நலனான உணவுகள்**

* காய்கறிகள் மற்றும் பழங்கள்
* மீன், கோழி இறைச்சி
* தானியங்கள் மற்றும் அவரை வகைகள்
* உழுந்து, குரக்கன் முதலியன
* வீட்டில் சமைத்த ஆரோக்கியமான உணவுகள்

**தவிர்க்க வேண்டிய உணவுகள்**

* சீனி, கருப்பட்டி, தேன், பாணி
* தீட்டிய கோதுமை மாவு
* தவிடு நீக்கிய அரிசி
* எண்ணெய் மற்றும் கொழுப்புகள்
* மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றியிறைச்சி
* பொரித்த உணவுகள்
* விரைவு உணவுகள்
* மதுபானம், புகைத்தலைத் தவிர்த்தல்
* சரீர உழைப்பு இல்லாத உறக்கம், வாசித்தல், கணினி பயன்படுத்தல். தொலைக்காட்சி பார்த்தல் போன்றவற்றில் இயன்றளவு குறைத்தல்.
* அனைத்து வயதுப் பிரிவினருக்கும் உடற்பயிற்சி அவசியம்.

**"Seeni meami"** செயற்றிட்டம்
**Inrteract Club – 2013**
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

1. முதுமையைக் கண்டு சிரிக்காதே, அது உன்னையும் நெருங்கிக் கொண்டிருக்கிறது.
2. இயற்கை, காலம், பொறுமை இவையே மூன்று சிறந்த மருத்துவர்கள்.
3. ஒரு செயலைச் செய்வதற்கு முன் பலமுறை யோசி, செய்தபின் யோசிப்பது தேவையற்றது.
4. மலையையும் கடுகாக நினைத்தால் வெற்றி நிச்சயம்; கடுகையும் மலையாக நினைத்தால் தோல்வியே மிஞ்சும்.
5. காதால் கேட்டவை அனைத்தையும் நம்புவதும் தவறு; கேட்டவை அனைத்தையும் சந்தேகிப்பது தவறு.
6. நாடு என்ன எமக்கு செய்தது என்று கேட்பதைவிட நாட்டுக்காக நீ என்ன செய்தாயென யோசி.
7. நீண்டதூரம் ஓடிவந்தால் தான் அதிக உயரம் தாண்ட முடியும்.
8. வெற்றியென்பது ஆற்றலைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில் தான் உண்டு.
9. திறமையையும் மிஞ்சும் ஆற்றல், நிலையான பயிற்சிக்கு உண்டு.
10. கோபம் வாயைத் திறக்க வைக்கும்; ஆனால் கண்களை மூடிவிடும்.
11. நல்ல செயலில் துணிவுடையோர் நாள்தோறும் வெற்றியே காண்பர்.
12. நண்பனுக்காக உயிரைக் கொடுப்பது எளிது. உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பனைத் தேடுவது அரிது.
13. உன் தகுதி பிறர்க்குத் தெரிய வேண்டுமானால் பிறர் தகுதியை நீ அறிந்து கொள்.
14. நீங்கள் விரும்பும் உரிமையை மற்றவர்களுக்கும் அளியுங்கள்.
15. உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர்ந்த வெற்றியை சாதிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. உள்ளத்தில் ஆழ்ந்த அன்பு இன்றி உடலை எவ்வளவு வருத்தி வழிபட்டாலும் இறைவனை அடைய முடியாது.

17. அன்பு ஒன்றுதான் வாழ்க்கையை இனிதாக்குகிறது.

18. வீழ்வது வெட்கமல்ல, வீழ்ந்து கிடப்பதே வெட்ககரமானது.

19. தன் குறைகளைப் பார்க்கிறவனுக்குப் பிறர் குறைகளைப் பார்க்க நேரம் இருக்காது.

20. துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு; ஆனால் அது உனக்கு விட்டுச்சென்ற பாடத்தை மறந்து விடாதே;

21. சொல்லால் கொல்லுவதும் கொலையே. நினைத்து வருந்து வதும் சாவே.

22. வினாக்களை, விடயத்தை, கேட்பதற்கு விரை, பேசுவதற்கு நிதானி, கோபத்திற்குத் தாமதி (சுணங்கு).

23. மனிதன் இருகண்களும் ஒரு நாவும் கொண்டிருப்பது, பேசுவதைவிட இரு மடங்கு நோக்க வேண்டும் என்பதே.

24. வழவழத்த அன்பைவிட வையிரமான பகை சிறந்தது.

25. இயலாமை என்னும் காரணம் ஏற்பட முயலாமை தான் காரணம்.

**உலகப் பெரும் தவறுகள் ஏழு**

1. உழைக்காமல் ஈட்டிய செல்வம்.
2. மனச்சாட்சி இல்லாத இன்பம்.
3. பண்பில்லாத அறிவு.
4. நல்லொழுக்கமில்லாத வணிகம்.
5. மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம்.
6. தியானம் இல்லாத வணக்கம்.
7. அடிப்படைக் கொள்கையில்லாத அரசியல்.

**Int. Sec. P. Jesuran**
*2014 (MAT)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்படுத்துங்கள்

வாசிப்பதற்கு நேரம் ஒதுக்கிடு
அது அறிவின் ஊற்றாகும்...!
சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது சக்தியின் மூலமாகும்...!
விளையாடுவதற்கு நேரம் ஒதுக்கிடு
அது மாறா இளமையின் உறைவிடமாகும்...!

நட்புக்கு நேரம் ஒதுக்கிடு
அது மகிழ்ச்சிகரமான பாதையாகும்...!
வேலை செய்ய நேரம் ஒதுக்கிடு
அது வெற்றியின் விலையாகும்...!
புதிதாகக் காண்பதற்கு நேரம் ஒதுக்கிடு
அது புத்திசாலித்தனத்தின் சான்றாகும்...!

அன்பை யாசிப்பதில் திருடனாகவும்
அறிவைத் தேடலில் பேராசைக்காரனாகவும்
சுய முன்னேற்றத்தில் தீவிரவாதியும்
கல்வி கொள்வதில் கஞ்சனாகவும்
எதிர்ப்பை சொல்வதில் முரனாகவும் இரு.

**Int. S. Senthuran,**
*2014 (COM).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் எழுத்தில் உணர்ந்தவை

1. அன்பை வளர்த்திடு
2. ஆற்றலைப் பெருக்கிடு
3. இயன்றதைக் கொடுத்திடு
4. ஈன்றோரைப் போற்றிடு
5. உண்மை பேசிடு
6. ஊக்கமாக உழைத்திடு
7. எண்ணும் எழுத்தும் கற்றிடு
8. ஏழையை மதித்திடு
9. ஐயம் தெளிந்திடு
10. ஒழுக்கமாய் வாழ்ந்திடு
11. ஓடி விளையாடிடு
12. ஔவை சொல் கேட்டிடு

**பொன் மொழிகள்**

வாயில் வருவதையெல்லாம் கொட்டாதே
கொட்டிய பிறகு பொறுக்க இயலாது.

மற்றவனிற்கு நலமாயிரு நீ நலமாகுவாய்.

உன்னை தன்னைவிட உயர்த்துகின்றவன்
தான் உன் உண்மையான நண்பனாகுவான்.

பிறர் பேசியதை விட நீ பேசியதை
நினைவில் வைத்துக் கொள்

நீ செய்ய இயலாவிட்டாலும் செய்தவற்றைப் பேணு.

நீ செய்வது உனக்குச் செய்யப்பட்டால்
என்று யோசித்த பிறகு செய்.

உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை
உபத்திரவம் கொடாதே.

உன்னுடையதை பொதுவாக்கு
பொதுவானது உன்னுடையதாகும்.

**Int. N. Birasanth,**
*2014 (COM).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் உங்களை விரும்ப....

* விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாய்நிறைய எவரையும் வரவேற்று விடுங்கள்.
* பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் புன்னகை உதிர்க்கத் தவறாதீர்கள்.
* முடிந்தாலும் முடியாவிட்டாலும் உதவமாட்டேன் என்று சொல்லாதீர்கள்.
* உண்மையானாலும், பொய்யானாலும் முதலில் நீங்களாகவே எதையும் வெளியிடாதீர்கள்.
* தகுதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாராட்டுதலைத் தவிர்க்காதீர்கள்.
* ஏற்றுக் கொள்ளமுடியாத கருத்தாக இருந்தாலும் எதிர்வாதம் செய்யாதீர்கள்.
* பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் நன்கு உபசரியுங்கள்.
* குற்றமென்றாலும் குறையென்றாலும் அதைப் பெரிதுபடுத் தாதீர்கள்.
* அரைகுறை நண்பர் என்றாலும் அப்போது தான் அறிமுகமாகி இருந்தாலும் பண்பாகப் பேசிக் கொள்ளுங்கள்.

சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம், பலரை சிலகாலம் ஏமாற்றலாம் எல்லோரையும் எக்காலமும் ஏமாற்ற நினைப்பவன் உலகில் தானே ஏமாளியாகி விடுகிறான்.

**Int. M. Thuvarakan,**
*2014 (Bio) 13I.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "குழந்தைகள் வாழும் சூழலில் இருந்தே கற்றுக் கொள்கிறார்கள்"

* கண்டனத்தில் வாழும் பிள்ளை, நிந்திக்கவே கற்றுக் கொள்ளும்.

* பகைமை உணர்வுடன் வாழும் பிள்ளை, சண்டையிடக் கற்றுக் கொள்ளும்.

* அவமதிப்பிடையே வாழும் பிள்ளை, அச்சம் கொள்ளக் கற்றுக்கொள்ளும்.

* பழிப்பின் இடையே வாழும் பிள்ளை, குற்ற உணர்வுடன் வாழக்கற்றுக் கொள்ளும்.

* சகிப்புத்தன்மையுடன் வாழும் பிள்ளை, பொறுமையுடன் வாழக்கற்றுக்கொள்ளும்.

* உற்சாக மூட்டலிடையே வாழும் பிள்ளை, தற்துணிவுடன் வாழக்கற்றுக்கொள்ளும்.

* பாராட்டலிடையே வாழும் பிள்ளை, மதிக்கக் கற்றுக் கொள்ளும்.

* பாதுகாப்புணர்வுடன் வாழும் பிள்ளை, நம்பிக்கையோடு வாழக்கற்றுக்கொள்ளும்.

* மெச்சுதலிடையே வாழும் பிள்ளை, தன்னை நேசிக்கக் கற்றுக் கொள்ளும்.

* சினேகபூர்வமாக வாழும் பிள்ளை, உலகத்தை அன்பு செய்யக் கற்றுக்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் சுய மதிப்பீட்டை வளர்த்துக் கொள்ள பெற்றோருக்குரிய ஆலோசனைகள்

* பிள்ளைகளை சுயமாக இயங்கச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
* பிள்ளைகளுக்குரிய பொறுப்புக்களைக் கொடுங்கள்.
* பிள்ளைகளின் ஒவ்வொரு செயலையும் பாராட்டியபின் ஆலோசனை கொடுங்கள்.
* சோர்ந்து போகும் போது வெற்றியை அடையும் வழிகளைக் காட்டுங்கள்.
* எப்போதுமே அவர்களை உயர்ந்தவர்களாக எண்ணுங்கள்.
* அடையக் கூடிய புதிய சவால்களை அவர்கள் முன் வையுங்கள்.
* அவர்களது "நல்ல" உணர்வுகளை ஊட்டக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்துங்கள்.
* நல்லவற்றைத் தட்டிக் கொடுங்கள்.
* பிரச்சனைக்கான தீர்வுகளை அவர்களிடமிருந்து கேட்டறிந்து ஆலோசியுங்கள்.
* அவர்களுக்குரிய முக்கியமான தினங்களில் அவர்களுக்காக நேரத்தை ஒதுக்குங்கள்.
* அவர்களுடன் சாதாரணமாக எந்தவொரு இடைவெளியுமின்றி மனம் திறந்து கதையுங்கள்.
* நகைச்சுவை உணர்வு ஊட்டக்கூடிய கதைகளைக் கூறிச் சேர்ந்து சிரியுங்கள்.
* ஊக்கம் தரக்கூடிய வார்த்தைகளை சிறு விடயத்திலும் பிரயோகியுங்கள். உதாரணமாக:- நல்லது, திறமையானவன், கெட்டிக்காரன், என்னுடைய பிள்ளை, உனைநினைத்து பெருமைப்படுகின்றேன்.
* பிள்ளைகளைப் பார்த்துப் புன்னகைத்தல், தூக்குதல், முத்தமிடல், அருகில் நித்திரை செய்தல் அணைத்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்யுங்கள்.
* எல்லாவற்றிற்கும் மேலாக எப்போதுமே அவர்களை அன்பு செய்வதாகவும் ஏற்றுக்கொள்வதாகவும் அவர்கள் உணரும் விதம் நடந்து கொள்ளுங்கள்.
* மேற்குறிப்பிட்ட செயற்பாடுடைய பெற்றோரின் கீழ் வளரும் குழந்தை தன்னம்பிக்கையுடையவனாகவும் தன்னைப்பற்றி மேலான சுயமதிப்பீட்டையுடையவனாகவும் ஆளுமையுடையவனாகவும் வளரும் என்பதில் ஐயமில்லை.

**Int. Pre. S. Lavesan,**
*2014 (Bio) 13I.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை வெறுப்பவர்களுக்கு சில வரிகள்..........

வாழ்க்கை ஒரு இலக்கு அதைஅடைந்துவிடு
வாழ்க்கை ஒரு சவால் அதை சமாளி
வாழ்க்கை ஒரு சாகசம் அதில் துணிவு கொள்
வாழ்க்கை ஒரு சோகம் அதை துடைத்துவிடு
வாழ்க்கை ஒரு கடமை அதை முடித்துவிடு
வாழ்க்கை ஒரு விளையாட்டு அதில் பங்குபற்று
வாழ்க்கை ஒரு புதிர் அதற்கு விடைகாண்
வாழ்க்கை ஒரு துன்பம் அதை எதிர்கொள்
வாழ்க்கை ஒரு வாய்ப்பு அதை பயன்படுத்து
வாழ்க்கை ஒரு பாடல் அதை பாடிப்பார்
வாழ்க்கை ஒரு பயணம் அதை செய்துவிடு
வாழ்க்கை ஒரு வாக்குறுதி அதை நிறைவேற்று
வாழ்க்கை ஒரு காதல் அதை அனுபவி
வாழ்க்கை ஒரு போர்க்களம் போராடிப்பார்
வாழ்க்கை ஒரு குழப்பம் அதை தீர்த்துவிடு
வாழ்க்கை தெய்வமானது அதற்கு மதிப்பளி

எப்படிப் படிக்க வேண்டும் என்பது முக்கியமல்ல;
எதைப் படிக்க வேண்டும் என்பதுதான் முக்கியம்.

**Int. Y. Kokulan,**
*2014 (Arts) .*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நன்றிக்குரியவர்கள்....

எமது " சுரபி" மலருக்கு வாழ்த்துச் செய்திகள் வழங்கிய அதிபர் பொறுப்பாசிரியர் றோட்டறிக் கழகத்தினருக்கும், வாழ்வகத்தினருக்கும் ''சுரபி'' உருவாகுவதற்கு ஆக்கங்களைத் தந்துதவிய மாணர்களுக்கும் இம்மலர் வெளியீட்டுக்கு அன்பளிப்புச் செய்த அன்பு உள்ளங்களுக்கும் மற்றும் இம்மலரினை மலர்விக்கவென தோளோடு தோள்நின்ற இன்ரறக்ட்கழகத் தோழர்களுக்கும் மேலும் இம் முயற்சிக்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி களையும் ஆலோசனைகளையும் வழங்கிய அனைவருக்கும் இம்மலரினை அச்சிட்டுத் தந்து உதவிய கரிகணன் நிறுவனத்தினருக்கும் நன்றி கூறத்தவறிய பெரியோர்களுக்கும் எமது மனப்பூர் வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்ரறக்ட்கழகம்
2012/2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Harikanan (Pvt.) Ltd., Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org